1023

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைகள் பீடம்
முகாமைத்துவ கற்கைகள் இளமாணி சிறப்பு பட்டப்படிப்பு
**AFU4571** கிரயம் மற்றும் முகாமைக் கணக்கீடு
இறுதிப்பரீட்சை – 2024 / 2025
காலம் – மூன்று (03) மணித்தியாலங்கள்

*திகதி: 22 ஜூன் 2025* | *மொத்த புள்ளிகள்: 100* | *நேரம்: மு.ப. 09.30 – பி.ப. 12.30*

அறிவுறுத்தல்கள்:

- ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.
- ஒவ்வொரு வினாவின் இறுதியிலும் புள்ளிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- அனைத்து செய்கைவழிகளும் தெளிவாகக் காட்டப்படவேண்டும்.
- ஒவ்வொரு விடையையும் ஒரு புதிய பக்கத்தில் இருந்து ஆரம்பிக்கவும்.
- நிரல்படுத்தப்படாத கணிப்பான் பாவனை அனுமதிக்கப்படுகிறது.
- மொத்த வினாக்களின் எண்ணிக்கை 05 பக்கங்களின் எண்ணிக்கை 06

**வினா இல 01**

(a) தியாதா எண்டர்பிரைஸ் அதன் உற்பத்தி செயற்பாட்டில் பயன்படுத்தும் "X" என்ற இருப்புப் பொருளின் பின்வரும் விவரங்கள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஒரு மாதத்திற்கான நுகர்வு - அதிகபட்சம் 1,000 அலகுகள், குறைந்த பட்சம் 200 அலகுகள்
முதன்மைக்காலம் (lead time) - அதிகபட்சம் 12 மாதங்கள், குறைந்த பட்சம் 4 மாதங்கள்
ஒரு நேரத்தில் கட்டளையிடும் அளவு 5,000 அலகுகள்.
மேற்கண்ட விவரங்களைப் பயன்படுத்தி, "X" இருப்பு பொருள் தொடர்பான பின்வரும் இருப்பு மட்டங்களைக் கணக்கிடவும்.

i. மீள் கட்டளை மட்டம்
ii. உச்ச இருப்பு மட்டம்
iii. இழிவு இருப்பு மட்டம்
iv. சராசரி இருப்பு மட்டம்

**(10 புள்ளிகள்)**

(b) டெய்ஸி பெல் (பிரைவேட்) லிமிடெட் என்ற பெண்களுக்கான கைப்பைகள் உற்பத்தி செய்யும் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பின்வரும் விவரங்கள் ஆடம்பர கைப்பைகள் தொடர்பானவை. ஆண்டுக்கான கேள்வி 60,000 அலகுகள். கட்டளைக் கிரயம் ரூ.60/- ஒரு கட்டளைக்கு, களஞ்சிய மற்றும் பராமரிப்பு செலவு: அலகுக்கிரயத்தில் 20%. ஒரு அலகிற்கான கிரயம் ரூ.100/-.
மேற்கண்ட விவரங்களைப் பயன்படுத்தி, பின்வருவனவற்றைக் கணக்கிடவும்;

i. சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ)
ii. வருடத்திற்கான உத்தம கட்டளைகளின் எண்ணிக்கை (optimum number of orders per year).

**(05 புள்ளிகள்)**

(C) பல்வேறு வகையான பொருட்கள் சேமிக்கப்படும் "கிரீன் ஹார்வெஸ்ட்" என்ற சூப்பர் மார்க்கெட், தற்போது இருப்பு மதிப்பீட்டிற்கு எடையிடப்பட்ட சராசரி செலவு (WAC) முறையைப் பயன்படுத்துகிறது. "ப்ளிஸ் பைட் பிஸ்கட்ஸ்" என்ற நுகர்வு பொருளின் மே 2025 முதல் இரண்டு வாரங்களின் பெறுவனவு மற்றும் வழங்கல்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

| பெறுவனவு | திகதி | அலகுகளின் எண்ணிக்கை | அலகுக்கான விலை (ரூ.) |
|---|---|---|---|
| 1ம் வாரம் | 2 | 1000 | 30 |
| | 4 | 800 | 28 |
| 2ம் வாரம் | 9 | 2000 | 35 |
| | 11 | 1500 | 39 |
| வழங்கல்கள் | திகதி | அலகுகளின் எண்ணிக்கை | |
| 1ம் வாரம் | 3 | 500 | |
| | 5 | 600 | |
| 2ம் வாரம் | 10 | 800 | |
| | 13 | 800 | |

களஞ்சியப் பேரேடு ( Store record card ) தயார் செய்து 2025 மே மாதம் 2ம் வாரத்தின் முடிவில் "ப்ளிஸ் பைட் பிஸ்கட்ஸ் "இன் இருப்பின் அளவு மற்றும் கிரயத்தை கணிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா இல 02**

(a) ஃப்ளோரல் எசன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் நுவரெலியாவில் பூக்கள் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளது. ஐந்து நிரந்தர ஊழியர்கள் களப் பணிகளில் பணியாற்றுகின்றனர். மே 2025 மாதத்தில் அவர்களின் சம்பளம் மற்றும் ஊதியம் தொடர்பான பின்வரும் விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

i. பணியாற்றிய மணிநேரங்களின் எண்ணிக்கை.

| ஊழியர் எண் | ஊழியரின் பெயர் | மணிநேரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| A25 | அனா லீ | 120 |
| A43 | மார்க் ஹில் | 160 |
| A52 | எம்மா கிளார்க் | 190 |
| A61 | டோம் ரீட் | 150 |
| A70 | லூசி கிரீன் | 140 |

ii. மாதத்திற்கான அதிகபட்ச மணிநேரம்: 190 மணிநேரம்.

iii. ஒரு மணிநேரத்திற்கு அடிப்படை சம்பளம்: ரூ. 300/-. மேலதிகநேர வேலைக்கு அடிப்படை சம்பள விகிதத்தில் 150% வழங்கப்படும்.

iv. ஊழியர்களின் EPF பங்களிப்பு 10%, தொழில் வழங்குனரின் EPF பங்களிப்பு 15% மற்றும் ETF பங்களிப்பு 3%.

v. ஒவ்வொரு ஊழியருக்கும் மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவு :ரூ .2,500/-.

vi. அனைத்து ஊழியர்களும் நலன்புரிசங்கத்திற்கு மாதாந்தம் ரூ.200/- பங்களிக்கின்றனர்.

vii. மார்க் ஹில் 10 மணிநேரம் மேலதிகநேர வேலை செய்துள்ளார்.

viii. எம்மா கிளார்க் அவரின் மாதாந்த கடன் தவணையான ரூ. 3,000/-ஐ கழித்து வங்கிக்கு அனுப்புமாறு எழுத்துமூல கோரிக்கை விடுத்துள்ளார்.

2025 மே மாதத்திற்கான சம்பள பட்டியலைத் தயாரிக்கவும்.

**(10 புள்ளிகள்)**

(b) பின்வரும் கிரய விபரங்கள் "பிரைம் எட்ஜ் சொல்யூஷன்ஸ் எண்டர்பிரைஸஸ்" நிறுவன தொழிற்சாலையின் 2025 மே மாதத்துடன் தொடர்புடையவை. இதற்கு மூன்று உற்பத்தி கிரய நிலையங்கள் மற்றும் இரண்டு சேவை கிரய நிலையங்கள் உள்ளன.

- கட்டட வாடகை ரூ.30,000.
- வரிகள் ரூ. 5,000
- மின்சாரம் - விளக்குகளுக்கு: ரூ. 10, 000 இயந்திரங்களுக்கு: ரூ. 30,000.
- இயந்திர தேய்மானம்: ரூ. 20,000
- இயந்திர காப்பீடு: ரூ. 4,000
- மேற்பார்வை செலவு: ரூ. 8,000
- சிற்றுண்டிச் செலவுகள்: ரூ. 6,000

| விபரம் | மொத்தம் | உற்பத்தி கிரய நிலையங்கள் | | | சேவை கிரய நிலையங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | A | B | C | களஞ்சியம் | பராமரிப்பு |
| தரைப்பரப்பு (சதுர அடி) | 3,000 | 900 | 700 | 600 | 400 | 400 |
| இயந்திரபெறுமதி(ரூ.). | 600,000 | 200,000 | 150,000 | 150,000 | 40,000 | 60,000 |
| ஊழியர் எண்ணிக்கை | 24 | 6 | 8 | 4 | 4 | 2 |
| இயந்திர திறன் (H. P) | 90 | 25 | 23 | 20 | 10 | 12 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் மேந்தலை கிரய பகுப்பாய்வு கூற்றினைத் தயாரிக்குக.

**(15 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா இல 03**

(a) Cost Volume Profit Analysis (CVP) பகுப்பாய்வின் நான்கு (04) அடிப்படை அனுமானங்களைக் கூறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

(b) டைட்டன் கிராஃப்ட் PLC நிறுவனம் A, B மற்றும் C என்ற மூன்று பொருட்களை உற்பத்தி செய்கிறது. தற்போது, பொருட்கள் A மற்றும் C இலாபகரமாக உள்ளன, ஆனால் பொருள் B நட்டத்தை ஏற்படுத்துகிறது, இவை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளதுடன், இவற்றின் தற்போதைய இலாபம்/நட்டம் வருமாறு.

| | A ரூ. | B ரூ. | C ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| விற்பனைகள் | 50,000 | 40,000 | 60,000 | 150,000 |
| மாறும் செலவு | 30,000 | 25,000 | 35,000 | 90,000 |
| நிலையான செலவு | 17,000 | 18,000 | 20,000 | 55,000 |
| இலாபம்/நட்டம் | 3,000 | (3,000) | 5,000 | 5,000 |

நிறுவனம் தற்போது பொருள் B இன் உற்பத்தியைத் தொடர வேண்டுமா இல்லையா என்பதை பரிசீலிக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியவை:

i. பொருள் B இன் உற்பத்தி நிறுத்தப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்கவும்.

**(12 புள்ளிகள்)**

ii. பொருள் B இன் உற்பத்தியை நிறுத்துவதன் மூலம் விடுவிக்கப்படும் வளங்களைப் பயன்படுத்தி, புதிய பொருளான B-plus-ஐ உற்பத்தி செய்ய முடியும் எனக்கொள்வோம். இது ரூ. 50,000-க்கு விற்கப்படும் மற்றும் ரூ. 30,000 மாறும் செலவுகளையும், மேலதிகமாக ரூ. 6,000 நிலையான செலவுகளையும் ஏற்படுத்தும். பொருள் B க்கு பதிலாக B-plus உற்பத்தி செய்யப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்கவும்.

**(09 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா இல 04**

(a) ஒரு வாடிக்கையாளர் கிளாரியோ என்ற ஆலோசனை நிறுவனத்தினை அவசரமான பணி ஒன்றினை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார். இப்பணியை மேற்கொள்ள பின்வரும் வளங்கள் தேவைப்படுகின்றன:

- தற்போது ஒரு மணிநேரத்திற்கு ரூ. 1,500/- வீதத்தில் பணியாற்றும் ஒரு ஊழியர், இந்தப் பணிக்காக 30 மணிநேரம் ஒதுக்க வேண்டும். வேறு எந்த ஊழியரும் தற்போது நடந்துகொண்டிருக்கும் பணியை மேற்கொள்ள முடியாததால், நிறுவனம் ஒரு மணிநேரத்திற்கு ரூ. 450/- பங்களிப்பை இழக்கும். பணியின் அவசரத் தன்மை காரணமாக, இந்த ஊழியருக்கு ஒரு மணிநேரத்திற்கு ரூ. 2,000/- வீதத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது.
- இந்தப் பணிக்கு 5 மணிநேர தலைமைக் கணினி நேரம் தேவைப்படுகிறது, இதை நிறுவனம் பொதுவாக வெளிப்புற பயனர்களுக்கு ஒரு மணிநேரத்திற்கு ரூ. 900/- வீதத்தில் வாடகைக்கு

விடுகிறது. தலைமைக் கணினி தற்போது வாரத்தில் 7 நாட்களும், 24 மணிநேரமும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தப் பணியின் தொடர்புடைய செலவைக் ( relevant cost ) கணக்கிடுக.

**(10 புள்ளிகள்)**

(b) எலெவெக்ஸ் PLC என்ற நிறுவனம் சில உபகரணங்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் ரூ. 1,500,000 பெறுமதியான ஒரு சிறப்பு கட்டளையைப் பெற்றுள்ளது. இந்த கட்டளையை நிறைவேற்ற பின்வரும் வளங்கள் தேவைப்படுகின்றன.

- மூலப்பொருட்களின் தேவை: ரூ. 500,000.
- தற்போதுள்ள தொழிலாளர்கள் நிறுவனத்தின் வழக்கமான செயல்பாடுகளில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர், இது தற்போது ஒரு மணிநேரத்திற்கு ரூ. 600/- பங்களிப்பை ஈட்டுகிறது. இந்த சிறப்பு கட்டளைக்கு 400 தொழிலாளர் மணிநேரங்கள் தேவைப்படுகின்றன. இக் கட்டளை ஏற்கப்பட்டால், வழக்கமான பணிக்கு பயன்படுத்தப்படும் தொழிலாளர் நேரம் இக் கட்டளையை நிறைவேற்றுவதற்கு மாற்றப்பட வேண்டும். தற்போது, தொழிலாளர்களுக்கு ஒரு மணிநேரத்திற்கு ரூ. 400/- வீதத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது.
- மாறும் மேந்தலைக் கிரயம் ஒரு மணிநேரத்திற்கு ரூ. 300/- வீதத்தில் அறவிடப்படுகிறது.
- நிலையான மேந்தலைக் கிரயம் ஒரு மணிநேரத்திற்கு ரூ. 300/- வீதத்தில் உள்வாங்கப்படுகிறது. இருப்பினும், இந்த சிறப்பு கட்டளை காரணமாக பொதுவான மேந்தலைக் கிரயம் ரூ. 200,000 ஆல் உயரும்.

இந்த சிறப்பு கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமா என்பதை மதிப்பீடு செய்யவும்.

**(15 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா இல 05**

(a) டியோமாக்ஸ் PLC ஒரே செயன்முறையிலிருந்து ‘L’ மற்றும் ‘K’ என்ற இரண்டு இணைப்புப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. பிரிக்கப்படும் புள்ளி வரை இணை செயலாக்க செலவு ரூ. 250,000 ஏற்படுகிறது, இதில் 125,000 அலகுகள் ‘L’ மற்றும் 75,000 அலகுகள் ‘K’ உற்பத்தி செய்யப்படுகின்றன. பிரிக்கப்படும் புள்ளியில் விற்பனை விலைகள் ‘L’ இன் ஒரு அலகுக்கு ரூ. 2.00 மற்றும் ‘K’ இன் ஒரு அலகுக்கு ரூ. 2.50 ஆகும். ‘L’ இன் அலகுகளை மேலும் செயன்முறைக்கு உட்படுத்தி 50,000 அலகுகள் ‘L plus’ என்ற புதிய பொருளை உற்பத்தி செய்ய முடியும், ஆனால் இதற்கு மேலதிகமாக ரூ. 30,000 நிலையான செலவும், உள்ளீட்டு அலகுக்கு ரூ. 0.20 மாறும் செலவும் ஏற்படும். ‘L plus’ இன் விற்பனை விலை ஒரு அலகுக்கு ரூ. 6.50 ஆக இருக்கும். நிறுவனம் ‘L’ ஐ உற்பத்தி செய்து விற்க வேண்டுமா அல்லது ‘L plus’ ஐ உற்பத்தி செய்ய வேண்டுமா?

**(10 புள்ளிகள்)**

(b) வின்டேஜ்வேல் PLC இன் 2025 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான சில செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான முன்னறிவிப்புகளை பின்வரும் தகவல்கள் குறிப்பிடுகின்றன:

| | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே |
|---|---|---|---|---|
| காசு விற்பனை (ரூ.) | 31,300 | 32,400 | 42,500 | 52,300 |
| கடன் விற்பனை (ரூ.) | 55,700 | 57,600 | 97,500 | 77,700 |

i. கடனிற்கு விற்கப்பட்ட பொருட்களுக்கான காசுப் பெறுவனவுகள், விற்பனை செய்யப்பட்ட மாதத்தில் 30% உம் மற்றும் மீதமுள்ள 70% அடுத்த மாதத்திலும் பெறப்படும் என முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

ii. இருப்புக் கொள்வனவு மொத்த விற்பனையில் சராசரியாக 60% ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த கொள்வனவுகளில் 50% கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தில் செலுத்தப்படுகிறது, மீதமுள்ளவை அடுத்த மாதத்தில் செலுத்தப்படுகின்றன.

iii. செயற்பாட்டு செலவுகள் அவை ஏற்படும் மாதத்தில் செலுத்தப்படுகின்றன. மாதாந்த செலவுகளில் அலுவலக வாடகை ரூ. 7,500, சம்பளங்கள் ரூ. 12,000 மற்றும் பயன்பாட்டு கட்டணங்கள் ரூ. 1,500 ஆகியவை அடங்கும்.

iv. மார்ச் மாத தொடக்கத்தில் காசு இருப்பு ரூ. 7,500 ஆகக் காணப்படுகிறது.

வேண்டப்படுவது:

1. 2025 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான பண வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்கவும்.

**(15 புள்ளிகள்)**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

-முழு பதிப்புரிமையுடையது -